# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1986 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க,
# நஞ்சுகள், அபின் அத்துடன் அபாயகரமான
# அவுடதங்கள் (திருத்தம்) சட்டம்

---

*[1986, செப்ரெம்பர் மாதம் 05 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1986, செப்ரெம்பர் மாதம் 05 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 30* *தபாற் செலவு : சதம் 75*

**1986 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, நஞ்சுகள், அபின் அத்துடன் அபாயகரமான அவுடதங்கள் (திருத்தம்) சட்டம்**

[1986 செப்ரெம்பர் 5 ஆம் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 74/84
1766

**நஞ்சுகள், அபின் அத்துடன் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினுல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது 1986 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, நஞ்சுகள், அபின் அத்துடன் அபாயகரமான அவுடதங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நஞ்சுகள், அபின் அத்துடன் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச்சட்டத்தின் 35 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் (2) ஆம் உட்பிரிவுகளை நீக்கஞ்செய்வதன் மூலமும் அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :— 218 ஆம் அத்தியாயத்தின் 35 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(1) பணிப்பாளர், தமது தற்றுணிபில், இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறுக, பச்சை அபினை அல்லது தயாரிக்கப்பட்ட அபினைப் பதிவுசெய்யப்பட்ட பாவனையாளர்களுக்கு அல்லது பதிவு செய்யப்பட்ட ஆயுள்வேத மருத்துவத் தொழிலர்களுக்கு விநியோகிக்கலாம்.

(2) அத்தகைய விநியோகமானது—

(அ) அபின் அலுவலர்களாக இருக்கவெனப் பணிப்பாளரினுல் சிறப்பாக நியமிக்கப்பட்ட சுகாதாரத் திணைக்களத்தைச் சார்ந்த பகிரங்க அலுவலர்களாகவும்; அத்துடன்

(ஆ) அபின் அலுவலர்களாக இருப்பதற்கென ஆயுள்வேத ஆணையாளரினுல் நியமிக்கப்பட்ட, ஆயுள்வேதத் திணைக்களத்தின் சகல வைத்தியசாலைகளுக்கும் மருந்துச்சாலைகளுக்கும் பொறுப்பாக இருக்கும் அலுவலர்களாகவும்,

இருக்கவேண்டிய அபின் அலுவலர்களுக்கூடாகப் பயனுறுத்தப்படுதல் வேண்டும்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணையில் ஆயுள்வேத ஆணையாளரினுல் நியமிக்கப்பட்ட அபின் அலுவலர் ஒருவர் தொடர்பாக, பணிப்பாளர் பற்றிய குறிப்பீடு ஒவ்வொன்றும் ஆயுள்வேத ஆணையாளர் பற்றிய குறிப்பீடொன்றுகக் கருதப்படுதல் வேண்டும். முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணையைத் திரிபுபடுத்தல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.